[5th May 1962

வந்திருக்கிறதா? அப்படிப்பட்ட புகார் வராமலிருக்க, இப்படி ஒரு கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருப்பதாக அரசாங்கம் கருதவில்லையா?

THE HON. SRI S. M. A. MAJID: இப்படிப் புகார்கள் இதுவரை வந்ததாகத் தெரியவில்லை.

SRI SAW. GANESAN: இம்மாதிரி முனிசிபாலிடிகளிலே வரி விதிக்கிறபோது, தவறுதலாகவோ அல்லது வேண்டுமென்றோ, ஒரே வீட்டை இரு கூறாகப் பிரித்து, இரண்டு விதமாக வரிகள் விதிக்கப்பட்டு, அதனாலே பலர் கஷ்டப்படுவது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

THE HON. SRI S. M. ABDUL MAJID: அப்படி அரசாங்கத்தின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை.

Salem Revenue District (Bifurcation of)

* 37 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state the stage at which the matter for bifurcating the revenue district of Salem into northern and southern parts stands now?

THE HON. SRI V. RAMAIAH: The Revenue District of Salem has already been divided into North and South Salem Development Districts. The whole question of bifurcation of heavy Revenue Districts including Salem District is under consideration.

SRI R. S. VEERAPPA CHETTIAR: இது எப்பொழுது முடிக்கப்படும் என்று அறியலாமா?

THE HON. SRI V. RAMAIAH: அதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் இப்பொழுது சொன்னேன்.

SRI M. KALYANASUNDARAM: இந்த மாவட்டங்களைப் பிரிக்கும் பிரச்சினையானது அரசாங்கத்தின் ஆலோசனையில் எத்தனை ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது? இறுதியான முடிவு எடுக்க இன்னும் எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்?

THE HON. SRI V. RAMAIAH: அபிவிருத்தி வேலைகள் அதிகமாகத் தொடங்கியவுடன், கலெக்டர்களுடைய வேலைப் பளு அதிகமாகப் போய்க்கொண்டே இருக்கிறது. அதைச் சரியாக நல்ல முறையில் கவனித்து, அந்த வேலைப் பளுவைக் குறைப்பதோடல்லாமல், ஜில்லாவில் இருக்கக்கூடிய பொது மக்களுக்கு வேண்டிய காரியங்கள் சீக்கிரமாக நடப்பதற்கு வேண்டி, ஜில்லாக்களைப் பிரிக்கும் விஷயம், அபிவிருத்தி வேலைகள் தொடங்கிய காலத்திலிருந்து பரிசீலனையில் இருந்து வருகிறது. அதற்குப் பல வழிகளை நாம் கடைப்பிடித்து, சமீபத்திலே அந்த வேலைப் பளுவைக் குறைப்பதற்கு 'டெவலப்மெண்ட் டிஸ்ட்ரிக்ட்' என்ற முறையில் இரண்டாகப் பிரித்திருக்கிறோம். அதோடல்லாமல், கலெக்டர்களுக்கு இருக்கும் வேலைப் பளுவைக் குறைக்கக்கூடிய முறையில், இந்தச் சட்ட மன்றம் இயற்றியிருக்கிற சட்ட அடிப்படையில்

5th May 1962]

டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ ஆபீசர்களை நாம் நியமனம் செய்திருக்கிறோம். இதையெல்லாம் பார்த்து, மேலும் அப்படிப் பிரிப்பது அவசியமா என்பதைப் பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறோம்.

SRI M. KALYANASUNDARAM: மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது ராஜ்யத்தில்தான் ஒவ்வொரு மாவட்டத்தின் விஸ்தீரணமும் மிக அதிகமாக இருக்கிறது என்பதும், அதன் காரணமாக நிர்வாகத்தின தரம் குறைந்து வருகிறது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்திருந்தால், அதன் மீது துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH: மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த மாநிலத்திலே ஜில்லாக்களின் அளவு சற்று பெரியதாக இருந்தாலும், நிர்வாகத் தன்மை—அதன் தரம்—குறையவில்லை அல்லது பாதிக்கப்படவில்லை என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

SRI J. MATHA GOWDER: சேலம் ஜில்லாவைப் பிரிப்பது போல், கோவை போன்ற பெரிய பெரிய ஜில்லாக்களையும் பிரிப்பது பற்றி எப்பொழுது அரசாங்கம் முடிவு எடுக்கும்? நான் வசிக்கும் சிறிய ஜில்லாவாகிய நீலகிரி ஜில்லாவோடு வேறொரு ஜில்லாவின் சில பகுதிகளையும் சேர்த்து, அதைப் பெரிய ஜில்லா ஆக்குவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா?

THE HON. SRI V. RAMAIAH: நீலகிரி ஜில்லாவை மற்ற ஜில்லாக்களோடு இணைக்கக்கூடிய பிரச்சினை இதுவரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால், நமது மாநிலத்தில் இருக்கும் எல்லாப் பெரிய ஜில்லாக்களையும் இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்ற அடிப்படையிலேதான் இப்பொழுது இருக்கக்கூடிய பெரிய பெரிய ஜில்லாக்களை இரண்டு டெவலப்மென்ட் டிஸ்ட்ரிக்ட்களாகப் பிரித்திருக்கிறோம்.

SRI M. KAMALANATHAN: 'டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸ்'-ஐ எங்கே வைப்பது என்ற தகராறு காரணமாக மாவட்டங்கள் பிரிக்கப்படும் விஷயம் தடைப்பட்டிருக்கிறதாக நான் அறிகிறேன். அது உண்மையா?

THE HON. SRI V. RAMAIAH: ஜில்லாத் தலைநகரை எங்கே வைப்பது என்பது பெரிய பிரச்சினை அல்ல. ஆனால், இப்பொழுது இருக்கக்கூடிய முறையில், பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் பரிசீலனை செய்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும்.

SRI A. THIAGARAJAN: கனம் சபாநாயகர் அவர்களே, புதுக்கோட்டையை போஸ்டல் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸாகவும், ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸாகவும் வைத்து இருக்கிறார்களே, அதுபோல், அதைத் தனி ஜில்லாவாக்கி,

[5th May 1962

புதுக்கோட்டையை ஜில்லாத் தலைநகரமாகவும் ஆக்குவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : புதுக்கோட்டையில் மட்டு மல்ல ; மற்ற எல்லா ஜில்லாக்களையும் பார்த்தோமானால், பல்வேறு இலாக்காக்களைப் பொறுத்தும், நிர்வாகத்தைப் பல பாகங்களா கப் பிரித்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் டெவலப் மென்ட் டிஸ்ட்ரிக்ட்களாக ஒவ்வொரு பெரிய ஜில்லாவையும் பிரித் திருக்கிறோம். அதே அடிப்படையில் முடிவுகள் எடுக்கும்போது இந்தப் பிரச்சினையும் கவனிக்கப்படும்.

SRI SAW. GANESAN : ஏற்கனவே ஜில்லாக்கள் பிரிக்கப் பெற்றது, ஜமீன், இனம் முதலிய பல காரணங்களால், அன்று இருந்த நிலைமைக்கு ஏற்ப பிரிக்கப்பெற்றது. இப்பொழுது இருக் கும் நடைமுறைக்கும் சூழ்நிலைக்கும் இப்பொழுது பிரிக்கப்பட் டிருக்கிற முறை போதிய வசதி இல்லாததாக இருக்கிறது என்பதை மனதில் கொண்டு மாநிலம் முழுவதையுமே மறுபடியும் ஒன்றாக இணைத்து, அதை எத்தனை ஜில்லாக்களாகப் பிரிப்பது பலன் உள்ளதாக இருக்கும் என்பதை மனதிலே கொண்டு, அரசாங்கம் ஜில்லாக்களைப் பிரிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்பொழுது இருக்கக்கூடிய வேலைப் பளுவுக்குத் தகுந்தாற்போல் ஒவ்வொரு பெரிய ஜில்லா வையும் இரண்டாகப் பிரிப்பது என்ற கொள்கையை ஒப்புக் கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் சொல்லக்கூடியது புது ஆலோசனையாக இருக்கிறது. மாநிலம் பூராவையும் ஒரே மொத்த மாக எடுத்துக்கொண்டு, எத்தனை ஜில்லாக்களாக அமைக்க வேண்டும், அதை எப்படிப் பிரிக்கவேண்டும் என்பதெல்லாம் புதுக் கருத்தாகும். இப்படிப் பரிசீலனை செய்யத் தொடங்கினால் இன்னும் ரொம்பக் காலம் பிடிக்கும். சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வர முடியாது. இப்பொழுதிருக்கும் நிலைமையில், வேலைப் பளுவுக் குத் தகுந்த முறையில் எப்படி டெவலப்மென்ட் டிஸ்ட்ரிக்டாகப் பிரித்திருக்கிறதோ, அதைத் தொடர்ந்து பரிசீலனை செய்யலாம்.

DR. B. NATARAJAN : இப்பொழுது சிறிதாக இருக்கும் ஜில்லாக்களில் நிர்வாகத் திறன், பெரிதாக இருக்கும் ஜில்லாவில் இருப்பதைவிட அதிகமாக இருக்கிறதா, குறைவாக இருக்கிறதா?

THE HON. SRI V. RAMAIAH : பெரிய ஜில்லாக்களிலே எவ்வளவு துரிதமாக நல்ல காரியங்கள் நடக்கத் தொடங்குகிறதோ, அதைப் போலவே சிறிய ஜில்லாக்களிலும் இருக்கிறது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்வதற்கில்லை.

SRI V. R. NEDUNCHEZHIYAN : தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்டங்கள் பிரிக்கப்படும்போதே, அந்தந்த மாவட்டங்களி னுடைய பெயர்கள் அந்தந்த மாவட்டத் தலைநகரின் பெயரிலேயே அமைக்கப்படுமா ?

5th May 1962]

THE HON. SRI K. KAMARAJ : மாவட்டங்களைப் பிரிக்கும் விஷயம், நண்பர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னதைப் போல, வெகு நாட்களாக ஆலோசனையில் இருந்துகொண்டு வருகிறது. ஆனால், இரண்டு ஆண்டுகளாகத்தான், மாவட்டங் களைப் பிரிக்காமலேயே, ரெவினியூ ஆபீசர்களைப் போட்டு கலெக் டர்களுடைய வேலைப் பளுவைக் குறைக்க முடியுமா என்று பரி சீலனை செய்து பார்த்துக்கொண்டு வருகிறோம். ரெவினியூ ஆபீசர் களைப் போட்டு வேலை நடந்து வருவதைப்பற்றியும், இன்னும் இது சம்பந்தமான எல்லா விஷயங்களையும் சேர்த்து வைத்து, மாவட் டங்களைப் பிரிக்கும் விஷயம் பரிசீலனை செய்யப்பட வேண்டியிருக் கிறது. மாவட்டத்தைப் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப்பொழுது அதன் அளவைக் கூட்டுவதா, குறைப்பதா என்பதைப்பற்றி யோசிக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக ரெவினியூ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அந்த நிர்வாகம் நடந்து வருவதில் கிட்டத்தட்ட இரண்டு வருஷ அனுபவம் ஏற்பட் டிருக்கிறது. இந்த அனுபவத்தின் மூலம் நன்மை ஏற்பட்டிருக் கிறதா? அதனால் இன்னும் நிர்வாகச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறதா?

THE HON. SRI K. KAMARAJ : பரிசீலனை பண்ணிக் கொண்டி ருக்கிறோம். ரெவினியூ அதிகாரிகளைப் போட்டு இரண்டு வருஷங் கள்தான் ஆகின்றன. கலெக்டர்களுக்கு இருந்த வேலைப் பளு அதனால் எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதைப் பார்த்து, மாவட்டங்களைப் பிரிக்காமலேயே ரெவினியூ அதிகாரி களின் உதவியைக் கொண்டே வேலை செய்ய முடியுமா என்பது பற்றியும் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது.

SRI M. RAJANGAM : இராமநாதபுரம் மாவட்டத்தின் தலை நகரம் மதுரையில் இருப்பதை இராமநாதபுரத்திற்கே மாற்றும் உத்தேசம் உண்டா? அல்லது, இராமநாதபுரம் மாவட்டத்தையே மதுரையோடு இணைத்துவிடும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMIAH : கனம் அங்கத்தினர் கூறிய இரண்டு உத்தேசங்களும் இப்போது பரிசீலனையில் இல்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Members.]

II.—ANNOUNCEMENTS.

(1) ELECTION TO THE COMMITTEE ON ESTIMATES.

MR. SPEAKER : I have to announce to the House that the following fourteen members were duly nominated for the election of fourteen members of the Madras Legislative Assembly to the Committee on Estimates for the year 1962–62 :—

1. Sri T. M. NALLASAMY
2. Srimathi T. N. ANANDNAYAKI
3. Sri RAMA ARANGANNAL